**செ. கு. எண்**: 386 **நாள்**:31.10.12

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 31.10.2012

**30.10.2012** அன்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழராங்கியம் கிராமத்தைச் சேர்ந்த திரு.வீரமணி மற்றும் அல்லிநகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.மலைக்கண்ணன் ஆகிய இருவரும் இரு சக்கர வாகனத்தில் பசும்பொன் கிராமத்தில் நடைபெற்ற தேவர் குருபூஜை விழாவிற்கு சென்று விட்டு ஊருக்கு திரும்பிக்கொண்டிருக்கையில், முதுகுளத்தூர் - பரமக்குடி சாலையில் சில நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

**30.10.2012** அன்று விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், டி.வேலங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவக்குமார் என்பவர் தனது வேனில் ஆட்களை ஏற்றிக்கொண்டு தேவர் குருபூஜை விழாவிற்கு சென்று கொண்டிருக்கையில் சில நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் சொல்லொணாத் துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இதேபோன்று, **30.10.2012** அன்று இரவு, மதுரை மாவட்டம், எஸ்.புளியங்குளம் கிராமத்தை சேர்ந்தவர்கள் பசும்பொன்னில் தேவர் சமாதியில் மரியாதை செலுத்திவிட்டு, டாட்டா சுமோ வாகனத்தில் திரும்பி சென்று கொண்டிருந்தபோது, மதுரை அவுனியாபுரம் அருகே அவ்வாகனத்தை நிறுத்தி அதன்மீது திடீரென எரியூட்டப்பட்ட பெட்ரோல் நிரப்பிய புட்டிகளை சில சமூக விரோதிகள் எரிந்துள்ளதையடுத்து அவ்வாகனத்தில் பயணம் செய்த 20 நபர்கள் தீக்காயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு.வீரமணி, மலைக்கண்ணன் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.சிவக்குமார் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.வீரமணி, திரு. மலைக்கண்ணன் மற்றும் திரு.சிவக்குமார் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், மிக பலத்த தீக்காயம் அடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், தீக்காயம் அடைந்தவர்களுக்கு தலா **50,000** ரூபாயும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**